Registered as a News paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (24 - 04 - 1991) புதன்கிழமை ஓசை: 65

## மூளைக்காய்ச்சலினால் இருமாதத்தில் 10 பேர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பரவிவரும் மூளைக்காய்ச்சலால் கடந்த இருமாதங்களில் பத்துப் பேருக்கு மேல் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுளம்பினால் ஏற்படும் இந்தநோய் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கும்படியும், நோய்க்கான அறிகுறிகள் தென்படும்போது வைத்தியர்களை அணுகி ஆலோசனை மற்றும் மருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் ஆயுதங்களை கைவிடும் வரை

# அரசாங்கம் பேச்சு நடத்தக்கூடாது

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழேபோடும்வரை அவர்களோடு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் மீதான விவாதம் நடைபெற்றபோதே இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

இவ்விவாதத்தில் பேசிய அரசாங்க தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பலரும் அவசரகாலநிலையைத் தொடர்ந்து நீடிப்பது அரசின் நோக்கம் அல்லவென்றும், நாடெங்கும் சமாதானத்தையும், சகஜ வாழ்க்கையையும் தோற்றுவிப்பதே அரசின் குறிக்கோள் என்றும் கூறினர்.

இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சியினர் தடுப்புக் காவலிலுள்ள இளைஞர்களின் விசாரணையை அரசாங்கம் (4ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் இரு படை பலி; ஆயுதங்களும் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் தாக்குதலுக்கு இரு இராணுவத்தினர் உட்பட மூவர் கொல்லபபட்டனர்.

கொம்மாந்துறை இராணுவத்தினர் செங்கலடி இராணுவ முகாமிற்குச் சென்றுகொண்டிருக்கையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் இறந்த இராணுவத்தினரின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவம் செங்கலடி இராணுவமுகாமிலிருந்து ஐந்நூறுயார் தொலைவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் உறுதி செய்துள்ளதுடன் இராணுவத்தினர் இருவருடன் (4ஆம் பக்கம் பார்க்க)

## 50 இராணுவத்தினரும் 14 பொலிஸாரும் பலி

(கொழும்பு)

**-வின்சன்ட்பெரேரா**

வடக்குக் கிழக்கில் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதலில் 14 பொலிஸாரும், 50 இராணுவத்தினரும் உயிரிழந் (4ஆம் பக்கம் பார்க்க)

### விடைத்தாள் திருத்த

## கொழும்பு செல்வோருக்கு போக்குவரத்து வசதி

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசேட உயர்தரப் பரீட்சைக்கான விடைத் தாள்களைத் திருத்துவதற்காகக் கொழும்பு செல்லவுள்ள சகல ஆசிரியர்களுக்கான சகல போக்குவரத்து வசதிகளும், தங்குமிடவசதிகளும், உணவு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக் (4ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பரீட்சை வினாத்தாள்களில் தவறு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு என விசேடமாக கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைகள் நேற்று நடைபெற்றன. இதில் வரலாறு ii இந்திய வரலாறு என்ற வினாத்தாளில் 5 ஆம் வினாவாக ''கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் இருந்து கி. பி. 300 ஆம் ஆண்டு வரை மகதப் பேரரசின் எழுச்சியின் பிரதான கட்டங்களைக் குறிப்பிடுக'' என அமைந்திருந்தது.

இக் கேள்வியில் குறிப்பிட்டுள்ள ஆண்டுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளமையால் மாணவர்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது. இது குறித்து யாழ் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என மாணவர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

## வீரவணக்கம்

### மதி

### 2வதுலெப்.மீரான்

(வல்வெட்டித்துறை)

கடந்த பெப்ரவரி மாதம் பத்தாம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் காயமடைந்த போராளி மதி (க. தர்மராசா தயாபரன் செம்பியன்பற்று கடந்த இருபத்திரெண்டாம் திகதி வீரமரணமடைந்துள்ளார்.

பலாலி முகாமின் அருகில் உள்ள ஒட்டகப்புலம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நேற்று நடந்த சண்டையில் இரண்டாவது லெப்ரினன்ட் மீரான்(சண்முகராசா கிருபாகரன் காரைநகர்) வீரமரணம் அடைந்தார் இவ்விரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## தமிழருக்கு எதையும் தர சிறிலங்கா தயாரில்லை

(யாழ்ப்பாணம்)

**- யோகி**

நிரந்தரத் தீர்வு ஒன்று முன்வைக்கப்படாமல் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் சமாதானத்தை தரப்போவதில்லை என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளா யோகரட்ணம் யோகி 'புலிகளின் குரல்' வானொலியில்ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்தத்தீர்வையும்தரத் தயாராகவில்லை. உலகைஏமாற்றவேபேச்சுவார்த்தை பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

## மூன்று தமிழர் விவகாரம் ஐரோப்பிய நீதிமன்றத்தில்

(லண்டன்)

மனித உரிமைக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தில் நேற்று மூன்று இலங்கைத் தமிழர் தொடர்பான விவகாரம் ஒன்று விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டிருந்தது. இவ்வழக்குக்கு ஆதாரமான சம்பவம் 1988இல் நடந்தது. பிரிட்டனில் அடைக்கலம் கோரிய மூன்று இலங்கைத்தமிழரின் நியாயங்களை ஏற்க மறுத்த பிரிட்டன் நீதிபதிகள் அவர்களை மீண்டும் இலங்கைக்கே அனுப்பி வைத்தனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

### 16 ப. நோ. கூ. சங்கங்களின்

## கடன் விண்ணப்பங்கள் மக்கள் வங்கியிடமுள்ளன

(யாழ்ப்பாணம்)

**- லிங்கநாதன்**

உபஉணவுப்பயிர்ச்செய்கைக்காக இதுவரை பதினாறு பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் மக்கள் வங்கியிடம் கடன் கோரி விண்ணப்பித்திருப்பதாக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளர் திரு. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு உப உணவுப் பயிர்களுக்காக மேற்படி விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் மாவட்டத்தில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் வளமற்ற மண்ணிலைக் காரணிகள் மற்றும் பயிர்ச் செய்கைக்கான சூழ்நிலை இன்மை போன்ற கார (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் குண்டுவீச்சு; நால்வர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் சுமார் ஒரு வாரகாலத்தின் பின்னர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் நால்வர் படுகாயமடைந்தனர். இரு வீடுகள் சேதமடைந்தன.

கடந்த 22ஆம் திகதி மாலையும், 23 ஆம் திகதி காலையும் சொந்தக்காரன் குளம் பகுதியில் விமானக் குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தணிகாசலம் தங்கலட்சுமி, (30), (4ஆம் பக்கம் பார்க்க)

## 3 பொலிஸார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இந்தியத் தூதரக ஊழியர் ராஜேந்திரன் தாக்கப்பட்டது தொடர்பாக மூன்று பொலிஸார் இடைநிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகப்பொலிஸ்உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நெருக்கடிகளுக்கு மத்தியில் மேதினம்

**- பரா**

இவ்வருடம் மேதின ஊர்வலம் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஏற்பாடு செய்யப் படவிருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. பரா அவர்கள் கூறியுள்ளார். நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலகத்தில் பல்வேறு தொழிலாளர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களின் கூட்டத்தில் உரையாற் (4ஆம் பக்கம் பார்க்க)

## 60 அந்தர் சுமக்கும் மாட்டுவண்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட நான்கு சில்லு மாட்டுவண்டி விற்பனைக்கு வந்துள்ளது.

புதியதொழில்நுட்பத்துடன் கூடிய இவ்வண்டியை வாங்குவதற்கு விரும்பும் அனைவரும் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டிக்கொண்டுள்ளது.

அறுபது அந்தர் எடையை எடுத்துச்செல்லும இவ்வண்டி கூட்டுறவுத் துறையினருக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் பெரிதும் பயன் படக்கூடியதாகும்.

## வரி விளம்பரம்


### பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள்கொப்பிகள் பேப்பர்,போத்தல்,செம்பு பித்தளை,கோழித்தீன் சீமெந்து உறைகள்,உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட்,(இலங்கை வங்கி முன்லேன்) யாழ்ப்பாணம். (B-2301)

### நியூ வெஸ்ரோன் எலக்ரோனிக் கோப்

ரீ.வி,டெக், றேடியோ, மணிக்கூடு றிவைண்டிங்மற்றும் எல்லாஉபகரணங்களும்,திருத்துபவர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும்[புரட்சிப் பாடல்கள்]பதிவுசெய்து கொடுக்கப்படும்.ஓட்டுமடம் சந்தி,ஓட்டுமடம். ( -2305)

### தவறிவிட்டது

சங்குப் பிட்டித் துறையில் 13.04.91 இரவு 10.00 மணியளவில்த.சுதாகரன் ஆகியஎனது ஆவணங்களுடன் வெள்ளை நிற பொலித்தீன் பை ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்குப்பிட்டிதுறை காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (B-2405)

### இலவசம்

வில்வம், நெல்லி, மகிழங் கன்றுகள், ஆலயங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்களில்வளர்ப்பதற்குத் தேவைப்படுவோரை உரிய விண்ணப்பத்துடன் நேரில் வந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளும்படி மில்க்வைற் அதிபர் அறிவிக்கிறார்.


## இலவச பாடநூல்கள்

# தமிழர் கலாசாரத்தை அழிக்கும் சக்தியாகவுள்ளது

**- பரமானந்தம்**

(கோப்பாய்)

''சிங்கள இனவாத அரசு இலவசப் பாடநூல்கள் என்ற வடிவில் எமது தேவைகளுக்கும், நோக்குகளுக்கும் மாறான பாடத்திட்டங்களைக் கொண்ட பாடநூல்களை எமது சிறார்களுக்கு வழங்கி வருகிறது. இவை எமது கலாசார, இன வரலாற்று உண்மைகளை எமது மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களிலிருந்து அழித்தொழிக்கும் சக்தியாகப் பரிணமிக்கின்றன'' என்று பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியத் தலைவர் த. பரமானந்தம் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்புத் தெரிவிக்கின்றது.

எமது மண்ணுக்கும், மக்களுக்கும் தேவையானதும், சகலரும் ஏற்புடையதுமான பாடநூல்களை வெளியிட தமிழர் கல்வியில் கரிசனை உடைய அனைத்து அமைப்புக்களும் கைகொடுத்து உதவுவதோடு, அரசின் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்றும் அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

# இன்றைய கல்வி மாணவரை சடப்பொருளாக்கியுள்ளது

**-ஆஞ்சநேயர்**

(யாழ்ப்பாணம்)

தமிழினமக்களை இனவெறிக் கொள்கையால் அழிக்க முற்பட்டு சிறிலங்கா இராணுவம் இன்று நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது. இந்த இனவெறியை எமது பலமான எதிர்த்தாக்குதல்கள் மூலம் இராணுவத்தின் மனோநிலையை உடைத்தெறிந்து வெற்றி கொள்ள முடியும் என நேற்று முன்தினம் கொக்குவில் பல்தொழில் நுட்ப கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பேசும் போது யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் கூறினார்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான புரிந்துணர்வு நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முகமாக நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரியில் பயிலும் அத்தனை மாணவர்களும் பங்கு பற்றினர். ஆஞ்சநேயர் மேலும் தமது உரையில் இன்றைய கல்விநிலை மாணவர்களை ஒரு சடப்பொருள் நிலைக்குத் தள்ளி உள்ளது என்றும் இம் மாணவர்கள் போராட்டத்துடன் இணைந்துபோகக் கூடிய அறிவு பெற்றுக் கொள்ளும் போது உயிர்த்துடிப்பை எய்துவதுடன் உணர்வுமிக்க நாட்டுப் பற்றுக்கொண்டவர்களாக மாறுகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (லோ)

## நிர்வாகிகள் தெரிவு

(ஈச்சமோட்டை)

பூநகரி கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின்வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகத்தினராக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ச. விஜயரட்ணம்,செயலாளர் ந. கிருஷ்ணபவன், பொருளாளர் ச. குணரத்தினம், உபதலைவர் க. நெற்சிங்கம், உப செயலாளர் ஆ. பாலகிருஷ்ணன். (43)

## நிறுவைகளுக்கு முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை பட்டின சபைக் காரியாலயத்தில் இம் மாதம் 22ஆம் திகதி(22-4-91) திங்கட்கிழமை முதல் 26 ஆம் திகதி (26-4-91) வெள்ளிக்கிழமை வரையும் காலை8.30 முதல்1.30 மணிவரை நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படுமெனயாழ். மாவட்ட நிறுவை அளவைகள் அலுவலகப் பகுதிப் பதில் அதிகாரி திரு.கே.நாகலிங்கம்தெரிவித்துள்ளார். (24)

## மறுமலர்ச்சிக் கழக பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-பல்கலைக் கழகமறுமலர்ச்சிக் கழக அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்றுஎதிர்வரும்27ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளமையால் மறுமலர்ச்சிக்கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கழகத் தலைவர் கேட்டுள்ளார்.


## 31ஆம்நாள் நினைவஞ்சலி



### திருமதி நாகலிங்கம் சின்னம்மா

தோற்றம் 27 - 03 - 1914

மறைவு 25 - 03 - 1991

திதி 24 . 04 . 1991

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அணையா சுடர் விளக்கே!
உங்கள் நாமம் எங்கள் நெஞ்சில்
என்றும் பூஜிக்கப்படும்-

அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

2 ஆம் வட்டாரம்
புங்குடுதீவு.

கணவர், மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(R-1345)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதிஇன்னுமணி துரைரத்தினம்

தோற்றம் 24 - 12 - 1906

மறைவு 24 - 04 - 1989

அம்மா ஈராண்டு சென்றால் என்ன?
எம் நாடி துடிக்கும் வரை
உங்கள் நினைவு எங்களிடமே!

''அருள்பதி''
மானிப்பாய் தெற்கு.

-குடும்பத்தினர்.

(B-2386)

## நினைவு கூருகின்றோம்...

**1991-04-24**



கப்டன் ரங்கன்
(துரைசிங்கம் ஜெயரங்கன்
புன்னாலைக்கட்டுவன்)

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமடைந்த
**முகமது** (இராசமாணிக்கம் ரவிநாதன் - பொலிகண்டி)

1988 ஆம் ஆண்டு கொம்மாதுறையில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**சூரி** (முத்துலிங்கம் சிறிபத்மநாதன் - செங்கலடி)

இதே ஆண்டு தேசத்துரோகிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கொல்லப்பட்ட
**நளினன்** (மணியம் தட்சணாமூர்த்தி - கிரான்)

1989 ஆம் ஆண்டு வாதரவத்தையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
**கப்டன் ரங்கன்** (துரைசிங்கம் ஜெயரங்கன் - புன்னாலைக்கட்டுவன்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
**சங்கர்** (கண்டி)

இதேஆண்டு கிளிநொச்சியில் தேசத்துரோகிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்
**பாரத்** (கிளிநொச்சி)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B! 2493)

## சிந்தனைக்கு

தன்வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்
— பட்டினத்தடிகள்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 24-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05


# தனிக்கட்சிஆட்சியிலிருந்து தனிமனித ஆட்சிக்கு

லண்டனில் இருந்து அண்மையில் சிறிலங்காதிரும்பிய முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவருமான திரு. காமினி திஸநாயக்கா பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். காமினிதிஸநாயக்கா லண்டனில் இருந்து திருப்பு முன்னரே அவர் சிறிலங்கா திரும்பினால் கைது செய்யப்படலாம் என பத்திரிகைகள் ஊகங்கள் வெளியிட்டிருந்தன.

காமினி திஸநாயக்கா 1988 ஆம் ஆண்டு யூன்மாதம் பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தப்பட்டதுதொடர்பாகவே விசாரணை செய்யப்பட்டுள்ளதோடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த ஆட்கடத்தல் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வரும்போது கோட்டிற்கு காமினிதிஸநாயக்காவையும் ஆஜராகுமாறு நீதிபதியால் பணிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தல் தொடர்பான விவகாரத்திற்கும் தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என தெரிவித்துள்ள காமினிதிஸநாயக்கா இது ஒரு அரசியல் மிரட்டல் எனவும் மூன்றாம் உலக நாடுகளில் பதவியில் இருப்பவர்கள் தங்கள் எதிரிகளை அகற்றும் முறையில் எவ்வாறு ஈடுபட்டுவருகின்றார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம் எனவும் சிறிலங்கா ஜனாதிபதியை நேரடியாகவே சாடியுள்ளார்.

அரசியலில் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்கும் ஓரங்கட்டுவதற்கும் அரசாங்க சட்டதிட்டங்களை தமக்கேற்றவாறு பயன்படுத்தும்முறை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அவர் காலத்தில் முக்கிய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்களின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டன. இடதுசாரிக் கட்சிகளின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையும் தமிழ்ப்பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குசெல்வதைத் தடுப்பதற்கு ஆறாவது திருத்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டது.

ஆனால் ஜே. ஆர் ஜெயவர்த்தனா காலத்தில் எதிர்க்கட்சிகள் பழிதீர்க்கப்பட்டாலும் தமதுகட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு பகிரங்கமாகப்பழிதீர்க்கும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் முரண்பட்டவர்கள் சாதுரியமாகக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். இந்த வரிசையில் இடம் பெற்றவர்களே சிறில் மத்தியூவும் நெவில் பெர்னாண்டோவும் ஆவர்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவின் நடவடிக்கைகள் ஒருபடிமேலே சென்று கட்சிக்குள்ளும் பழிதீர்க்கும் நடவடிக்கைகளும் வெளிப்படையாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்கு முதலில் ஆளாகியவர் முன்னாள் நிதி அமைச்சரான ரொனி டீ மெல் ஆவர். அவர் தொடர்ந்தும் சிறிலங்காவில் தங்கியிருப்பாரானால் பெரும்பாலும் சிறைவாசத்தை அனுபவித்திருப்பார் என்றே கூறலாம்.

அடுத்த முக்கிய பிரமுகர் காமினி திஸநாயக்கா ஆவர். ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் காமினி திஸநாயக்காவிற்கும் இடையில் உள்ள முறுகல் நிலை தற்பொழுது ஏற்பட்டதல்ல. முன்னாள் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு உரியவரான காமினி திஸநாயக்காவிற்கும் இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் இடையில் ஆரம்பம் தொட்டே நல்லுறவு இருக்கவில்லை. இவர்களின் உறவுநிலை இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கை, ஜனாதிபதித்தேர்தலுக்கான ஐ. தே. கட்சி வேட்பாளர் தெரிவு ஆகியவற்றுடன் மேலும் விரிசல் கண்டது. இந்திய- சிறிலங்கா சமாதான உடன்படிக்கையை வரவேற்ற காமினிதிஸநாயக்கா ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருக்கான போட்டியில் பிரேமதாஸாவிற்கு எதிராகவும் போட்டியிட்டார்.

இந்நிலையில் தேர்தலில் வெற்றியீட்டிய பிரேமதாஸா காமினி திஸநாயக்கா விடயத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்தார். ஜே. ஆர். அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்த காமினி திஸ நாயக்கா பிரேமதாஸா அமைச்சரவையில் ஓரம் கட்டப்பட்டார். ஆரம்பத்தில் ஒரு மந்திரிப்பதவி வழங்கப்பட்டதாயினும் பின்னர் அதுவும் பறிக்கப்பட்டது.

அதேவேளை காமினி திஸநாயக்கா மகாவலி அமைச்சராக இருந்த போது அமைச்சில் மோசடிகள் இடம் பெற்றதான குற்றச்சாட்டுகள் மூலம் பழிதீர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதாவது சிறிலங்காவில் தனிக்கட்சி ஆட்சி முறையை உருவாக்கிவிட வேண்டும் என முன்னாள் அதிபர் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா திட்டமிட்டுச் செயற்பட்டார். இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா தனிமனித தனிக் கட்சி ஆட்சியை உருவாக்க முற்படுவது போல் தெரிகின்றது. ஆனால், முன்னைய ஜனாதிபதியின் செயற்பாட்டின் வளர்ச்சி நிலையே இன்றைய ஜனாதிபதியின் செயற்பாடு ஆகும். ஆனபடியால் முன்னைய ஜனாதிபதியின் செயற்பாட்டிற்கு ஆதரவாக இருந்தவர்கள் இன்றைய ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

# விவசாயிகளே, வேப்பமரங்கள் மீது கவனம் செலுத்தவும்,

### பயிர்ப் பாதுகாப்பில் வேம்பு

நமது மண்ணில் குறிப்பாக வன்னிப் பிரதேசங்களில் ஏராளமான வேப்பமரங்கள் உள்ளன. மிகுந்த பயனுள்ள இந்த வேம்பை எவரும் அதிகம் கவனிப்பதில்லை. அவை தாமாகவே பூத்துக் காய்த்து பழங்களை மண்ணில் உதிர்க்கின்றன. இவ்வாறு உதிர்ந்து கிடக்கும் பழங்களை (கொட்டைகளை) சேகரித்து பக்குவப்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டோமானால் இதிலிருந்து நிறையப் பயன்களைப் பெறமுடியும்.

பயிர்ச் செய்கைக்குத் தேவைப்படும் பசளை, பீடை கொல்லி போன்றவைக்கு பெரும் தட்டுப்பாடு, தடை என்பன ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் வேம்பின் அவசியம் கட்டாயமாக உணரப்படவேண்டிய ஒன்றாகவுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பில் வேப்பம் பொருட்களைப் பயன்படுத்தும் ஆய்வில் இந்திய விஞ்ஞானிகள் 1020 ஆம் ஆண்டு தொடக்கமும் மேற்கத்திய விஞ்ஞானிகள் கடந்த 15 ஆண்டுகளாகவும் ஈடுபட்டுவருகின்றனர். சில விவசாயிகள் இப்பொருட்களைத் தாமாகவே பரீட்சித்துப்பார்த்து வெற்றியும் கண்டனர்.

இவ்வாறு தாவரப்பொருட்களைக் கொண்டு பயிர்களைப் பாதுகாக்கும் முறையைக் கண்டுபிடித்து வெற்றியீட்டியவரில் முக்கியமானவர் இந்தோனேசியாவைச்சேர்ந்த குன் அனப்தன்சகுல் என்பவர். இவர் கண்டுபிடித்த கலவையை ஐயாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் உடனடியாகப் பின்பற்றத் தொடங்கினர். சில கம்பனிகள்கூட அதைத் தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கின.

தாராளமாக நமக்குக் கிடைக்கக்கூடிய வேப்பம் பொருட்களைக்கொண்டு எவ்வாறு பயிர்ப் பாதுகாப்புச் செய்யலாம் என்பதைப் பார்ப்போம் வேப்பம் பொருட்கள் என்று கூறும்போது அதன் இலை, விதை, பருப்பு, பட்டை, மரம் என்பவற்றைக் குறிக்கும்.

### வேப்பம் பொருட்களினால் செய்யப்படும் கலவைகள் கட்டுப்படுத்தும் பூச்சிகள்:

சாறு உறிஞ்சும் பூச்சிகளான சிற்றுண்ணி, நெல் மூட்டுப்பூச்சிகள், பனிப்பூச்சிகள் என்பவற்றையும் தத்துவெட்டிகள், இலையரிப்புழுக்கள், பூசனி வண்டுகள், சுரங்கப்புழுக்கள், விலாங்குப்புழு என்பன உணவு உட்கொள்வதையும் முட்டையிடுவதையும் தடுக்கும். வளர்ச்சியைக் குன்றவைக்கும் குடல்நச்சாகவும், ஊடுருவி நாசினியாகவும் இது செயல்படுகின்றது.

### தயாரிக்கும் முறை:-

(1) 500 கிறாம் உலர்ந்த வேப்பம் விதையை அல்லது 250 கிறாம் பருப்பை நன்றாக இடித்து ஒரு வாளி நீரில் 12 மணித்தியாலங்கள் ஊறவிடவும். பின்பு துணியால் நீரை நன்கு வடித்து அத்துடன் மேலும் நீர் கலந்து 400 லீற்றர் கலவையாக்கவும். இக் கலவை பூச்சிகள் அணுகாதிருக்க ஒரு ஏக்கருக்கு ஒரு முறை தெளிக்கப் போதுமானது.

(2) 5 கிலோ உலர் விதையை அல்லது 2 1/2 கிலோ பருப்பை நன்கு இடித்து 12 மணித்தியாலங்கள் ஒரு வாளி நீரில் ஊறவைத்து பின்பு நன்றாசப் பிழிந்து நீரை துணியால் வடித்து எடுத்து அதனுடன் மேலும் நீர் சேர்த்து 100 லீற்றர் ஆக்கி 10 கிறாம் சவர்க்கார நீர் கலந்து விசிறினால் பூச்சிகள் கட்டுப்படும்.

### குறிப்பு:-

நன்கு முற்றிய உலர்ந்த பருப்பு 25 கிறாம் அல்லது முழு விதை 50 கிறாம் நீருக்கு என்ற அளவில் நீர் உபயோகிக்க வேண்டும்.

(3) உடன் பறித்த 5கிலோ வேப்பிலையை 30 லீற்றர் நீரில் அரை மணிநேரம் அவித்து இரவு முழுவதும் ஆறவிட்ட பின் காலையில் விசிறலாம். இது ஒரு ஏக்கருக்குப் போதுமானது.

நெல் உற்பத்தியாளர் பயிர் முளைத்த அல்லது நடப்பட்ட 15ஆம், 30ஆம், 45ஆம் நாட்களில் மேற்குறிப்பிடப்பட்ட முறைகளில் ஒன்றை பயன்படுத்தி வருவாராயின் அநேக பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். மேட்டுநிலப் பயிர்களுக்கு இவை பொருத்தமானவையாகும். அத்துடன் எண்ணெய் எடுக்கப்பட்ட வேப்பம் பிண்ணாக்கு சிறந்த பசளையாகவும் உபயோகப்படுகிறது.

:தமிழீழ ஆய்வு நிறுவனம்

# யாழ். வரும் முத்திரைக்கு நடப்பதென்ன?

ஆசிரியர்
ஈழநாதம்,

20.04.91 சனிக்கிழமை ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த யாழ். வரும் முத்திரைக்கு நடப்பதென்ன? என்ற தலையங்கத்தில்வந்த செய்தி படித்து யாழ். பிரதம தபால் அதிபர் உட்பட அனைத்து உத்தியோகத்தர், ஊழியர்களாகிய நாங்கள் அதிர்ச்சியடைகின்றோம், இந்நிலையில் எங்களுடைய நிலைப்பாட்டைத் தங்கள் பத்திரிகையின் மூலமாகவே பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த சனிக்கிழமை கப்பல் மூலம் பெறப்பட்ட தபாலில் எங்களுக்குக் கிடைத்த முத்திரையின் பெறுமதி ரூபா 100000/-(ஒருஇலட்சமாகும்.) இது எங்களுடைய வழமையான தேவையைப் பூர்த்தி செய்வதில்1/10 (பத்தில் ஒரு) மடங்கே ஆகும். இருந்தும் கடந்த 16.04.91 செவ்வாய்க்கிழமை தொடக்கம் தொடர்ந்து யாழ். முத்திரை கருமபீடத்தில் முத்திரைகள், வான்வெளிக் கடிதங்கள், (Aerogrames) என்பன விநியோகித்து வருகின்றோம் ஒரு சில பெறுமதிக்குரிய (Denomiations) முத்திரைகள் முடிவடைந்தது உண்மையே.

மேலும் எங்களுக்குக்கிடைக்கப்பெற்ற ரூபா 100000/- (ஒரு இலட்சம்) முத்திரையில் யாழ். பிரதம தபாலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து உப தபாலங்களுக்குரூபா 25000ம் பெறுமதியான முத்திரைகளும், ஜிலானி முகவர் அஞ்சல் நிலையத்திற்கு ரூபா 10000/- பெறுமதியான முத்திரைகளும் எம்மால் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி ரூபா 65000/- (அறுபத்திஐயாயிரம் முத்திரைகளைக் கொண்டு இன்னும் நாங்கள் பொதுமக்களுக்கு முத்திரைகளை விநியோகித்து வருகின்றோம்.

வெளியார் நிலையங்களில் விற்பனையாகும் முத்திரைகளுக்கும், எங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

க. இராஜேந்திரம்
பிரதம தபாலதிபர்,
யாழ்ப்பாணம்,

### மக்கள் மடல்

பிரதம ஆசிரியர்,
ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

ஐயா,

கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு முத்திரை வாங்குவதற்கு நானே பிரதம தபால் கந்தோருக்குச் சென்றிருந்தேன். அங்கே சேவையில் உள்ளவர்கள் முத்திரைகள் இருப்பதாகவும் விநியோக உத்தியோகத்தர் வந்ததும் பெற்றுக்கொள்ளலாமென்றும் கூறினர்.

பிற்பாடு காலை 10 . 30 மணிக்கு சென்றேன் முத்திரைகள் முடிந்ததாகக் கூறப்பட்டது. என்னுடன் இன்னும் பலர் முத்திரைக்கு வந்து கிடைக்காததால் பலவாறும் தபால் கந்தோர் நிர்வாகத்தை விமர்சித்துக் கொண்டு சென்றனர்.

நிருபரான எனக்கு அதைச் செய்தியாக்கும் சிந்தனை தோன்றியது. செய்தியாக்கினேன்.

நன்றி -:
இங்ஙனம்
(செய்தியாளர் இலக்கம் 21)

# 260 குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரணம்

காரை நகர், ஊர்காவற்றுறை, வவுனியா, சிலாவத்துறை ஆகிய இடங்களில் இருந்து நாவாந்துறை, அராலி, சிப்பித்தறை, ஓட்டுமடம், கொட்டடிப்பகுதிகளில் இடம் பெயர்ந்து அகதிகளாக வந்து தங்கியிருக்கும் 260 குடும்பங்களுக்கு யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் மாதாந்தம் 300 ரூபா பெறுமதி வாய்ந்த உலர் உணவு வகைகளை நிவாரணமாக வழங்கி வருகிறது.

வண-பற்றிக்ஸ் ஞானப்பிரகாசம் அடிகளின் ஏற்பாட்டில் புனித மரியாள் ஆலயப்பங்குச் சபையினர் மாதாமாதம் உலர் உணவுப் பொருட்களை அகதிகள் குடும்பங்களுக்கு பெற்று வழங்கி வருகின்றனர். (21)

# கருத்தரங்கு

தேசிய கூட்டுறவுச்சபையும் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கமும் இணைந்து இம்மாதம் 27 ஆம் திகதி பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்களுக்கான ''சேவை விரிவுபடுத்தல்'' கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளன. (25)

# வாக்குவாதம் ஏற்பட்டது

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய நிர்வாக சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் நிதி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டபோது செயலாளருக்கும் அவருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த உறுப்பினர் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்து ஆலய முன்றலில் கொழுத்தும் வெயிலில் உண்ணா நோன்பிருந்தார். இதனைத் தொடர்ந்து அவரது மனைவியும் உண்ணா விரதமிருந்தார். பின் அப்பகுதிப் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இவர் உண்ணா விரதத்தைக் கைவிட்டார். (ச)

## நட்சத்திரப்போர்

# திட்டத்தை அமெரிக்கா துரிதப்படுத்தவுள்ளது

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது நட்சத்திரப்போர் பாதுகாப்பு முறையை துரிதப்படுத்தவுள்ளது. இந்த விண்வெளி சார்ந்த பாதுகாப்புமுறை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை அழிக்கக் கூடியதாகும்.

அமெரிக்க வீரர்களின் குழு ஒன்று வெகுவிரைவில் இந்தப் பணிக்காக விண்வெளிக்கு செல்லவுள்ளது இந்தக் குழு கண்டம்விட்டு கண்டம்பாயும் ஏவுகணைகளைத் தடுப்பது தொடர்பான முக்கிய தகவல்களைச் சேகரிக்கவுள்ளது. டிஸ்கவறி பெயரிலான இந்த விண்வெளிக் கலம் எட்டு இராணுவ வீரர்களுடன் புறப்படத் தயாராகி வருகிறது. எட்டாவது இராணுவ ரீதயான இந்தப் பயணம் சிக்கலானதொன்றாக ஆய்வாளர்கள் வர்ணித்துள்ளனர்

# சிறிய நாடுகள் பாதுகாப்பு; மாலேயில் கருத்தரங்கு

(மாலே)

சிறிய நாடுகளின் பாதுகாப்புக் குறித்த கருத்தரங்கு ஒன்றினை மாலைதீவில் நடத்த அந்த நாட்டு அரசாங்கம் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

மே மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள இந்தத் கருத்தரங்கில் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள என்ன வழிமுறைகளைக் கைக்கொள்ளலாம் என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும், இலங்கை உட்பட உலகெங்கிலும் இருந்தும் பல நாடுகள் கலந்து கொள்ளவிருக்கின்றன எனவும் மாலைதீவு வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## தருமலிங்கம் செல்லப்பா

சரசாலை தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய நெசவு ஆசிரியர் தருமலிங்கம் செல்லப்பா காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24 - 04 - 91 இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:<br>
(R/1347) செ. நகுலேஸ்வரதாஸ்

## திருமதி நாகம்மா கார்த்திகேசு

காலஞ் சென்ற மலாயன் பென்சனியர் கார்த்திகேசுவின் அருமை மனைவி நாகம்மா சனிக்கிழமை சங்கரத்தையில் காலமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 25 - 04 - 91 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9 மணிக்கு வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,<br>
வட்டுக்கோட்டை.

தகவல்:<br>
நா. ஜெயரஞ்சிதன்

(R/1346)

## திருமதி றீற்றம்மா தியாகராசா

(நல்லூர் ஆசீர்வாதப்பர் கோயில்)

திருமதி றீற்றம்மா தியாகராசா அவர்கள் கொழும்பில் 21 - 04 - 91 அன்று காலமானார். அன்னார் திரு. தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும், திரு கிறிஸ்ரி வசந்தராசா (பிரான்ஸ்', திருமதி வதனி ஜெயசிங்கம், செல்விகள் காமினி மாலினி, அனஸ்ரி வதனராசா (டோல். பிரான்ஸ்), செல்வி நளாயினி, செல்வன் லெஸ்லி வண்ணராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. செ. ஜெயசிங்கத்தின் அன்பு மாமியாரும், தினேஸ்குமார், கிரிசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு. ம செ. அலெக்சாண்டர் (விரிவுரையாளர்), திரு. ம. சிங்கராசா, திருமதி கேதாரம் செல்வதி, காலஞ்சென்ற திருமதி துரைராசா தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக 24 - 04 - 91 இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

46/11, ஆசீர்வாதப்பர் வீதி,<br>
நல்லூர்,<br>
யாழ்ப்பாணம்.

தகவல்:<br>
திரு. செ. ஜெயசிங்கம்<br>
(R/1348)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நேபாளத்தில் பொதுத்தேர்தல்

(காட்மண்டு)

நேபாளத்தில் அடுத்தமாதம் 12ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. ஒரு கோடியே 10 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 8,000 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 214 ரூபா நஷ்டஈடு

(சென்னை)

தமிழக அரசு பேரூந்துக் கழகம் ஒன்று பெண் பயணி ஒருவருக்கு 214 ரூபா நஷ்டஈடு வழங்கப்பணிக்கப்பட்டுள்ளது.

அரைக் கட்டணம்பெற்ற தனதுமகனுக்குஆசனம்வழங்க ஓட்டுநர் மறுத்ததாகப் பயணி கொடுத்த மனு ஒன்றின்மீதே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மகனை மடியில் வைத்து மதுரையிலிருந்து நாகபட்டினம் வரை தான பயணம் மேற்கொண்டதால் தனக்கு இன்னலும், முதுகு வலியும் ஏற்பட்டதாகஅப்பெண் மனுக் கொடுத்திருந்தார்.

# ஆஸ்பத்திரிக்குள் பாம்புக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த யாழ். செஞ்சிலுவைச் சங்க தொண்டர் ஒருவரை பாம்பு தீண்டியது,

நேற்று முன்தினம் இரவு ஊழியர் வாயிலில் கடமையில் இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கராஜா அரவிந்தன் (வயது 20) என்பவர் தமக்கென அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்குள் சென்றபோதுஅதற்குள் இருந்த புடையன் பாம்புஇவரது காலைத்தீண்டியது. உடனடியாக இவர் சக தொண்டரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ச) (85)

### கொழும்பு

கான விடைத் தாள்களை கொழும்பில் உள்ளோர் திருத்தும் போது பாரபட்சம் காட்டப்படலாம் என்பதினாலேயே யாழ். மாவட்டத்திலிருந்து இதனைத் திருத்துவதற்கு 65 வீதமான ஆசிரியர்களைத் தான் அனுப்பி வைக்க ஒழுங்குகளை மேற்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச(

### மூளைக்காய்ச்சலினால்

களைப் பெறுமாறும் வைத்தியர்களினால் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செங்கலடியில்

ஒரு முஸ்லிம் ஊர்காவல்படையினரும் உயிரிழந்ததாக அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

- ★ ரீ. 56-1 -2
- ★ ரீ. 56 ரவைக்கூடு-2
- ★ ஐ. எம். ரவைகள்-60

### 50 இராணுவத்தினரும்

தார்களென சிறிலங்காப் பாராளுமன்ற விவகாரஅமைச்சர் வின்சன்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்கூடிய பாராளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கானதீர்மான விவாதத்தின்போது அதனைத் தொடக்கி வைத்துப் பேசிய வின்சன்ட் பெரேரா இப்புள்ளிவிபரத்தை வெளியிட்டார்.

தொடர்ந்துபேசிய தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க உரையாற்றுகையில் ''வடக்குக் கிழக்கில் தற்போது யுத்தம் ஒன்று நடைபெறுகிறது. அவசரகாலச் சட்டம இல்லாவிட்டால் இந்த யுத்தத்தை மேற்கொள்ள முடியாது'' என்று குறப்பிட்டார்.

# தாண்டிக்குளத்தில் ராணுவ அடாவடித்தனங்கள்

(வவுனியா)

தாண்டிக்குளம் தடைமுகாமிலுள்ள இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இருபத்திரண்டாம் திகதி தடைமுகாமில்வைத்து இரு பெண்களை இராணுவத்தினர் தாக்கியதோடு, ஒருவரை மானபங்கப்படுத்தியுள்ளனர். அதேவேளை மூன்று இளைஞர்கள் பலமாகத் தாக்கப்பட்டுள்ளனர். அன்று மாலை பொதுமக்கள் மீது பரவலான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

# தொழில் நுட்பப் பயிற்சி

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் தொழில் நுட்பப்பயிற்சிஒன்றை அளிக்க முன்வந்துள்ளது. இதற்காக பொருத்தமான இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது நவீன தொழில் நுட்ப ரீதியில் பதநீர் சேகரித்தல், நவீன தொழில் நுட்ப ரீதியில் பனம்பாகு, பனை வெல்லம், பனஞ்சீனி போன்றவற்றை உற்பத்திசெய்தல், பனைசார் கைப்பணி அழகுப் பொருள்கள், பனந்தும்பு ஈர்க்கு, நார் உற்பத்திபோன்ற துறைகளில் மூன்றுமாத காலப பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சிக் காலத்தினபோது கவர்ச்சிகரமான ஊக்குவிப்புத் தொகையுடன் பயிற்சிமுடிவின் பின் திறமைக்கு ஏற்ற நிரந்தர தொழில் வாய்ப்பு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது என பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது.

# மேதின ஏற்பாடு

(அரியாலை)

மேதின ஏற்பாடுகள் பற்றிய கூட்டமொன்று நாளை அரியாலை கனகரட்ணம் சந்தியில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும், பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகப் பிரமுகர்களும் கலந்து கொள்ள உள்ளனர். அத்துடன் மேதினம் பற்றிய தெருக்கூத்து நிகழ்ச்சி யொன்றும், நடமாடும் நிதர்சனப்பிரிவின் தொலைக்காட்சி நிகழ்ச்சியும் இடம் பெற உள்ளது.

### வவுனியாவில்

சற்குணசிங்கம் (30), ச. பத்மாவதி (27) பகாராசா தவநிதி (11) ஆகியோர் காயமடைந்துள்ளனர்

இத் தாக்குதலின் போது தணிகாசலம் என்பவரது வீடு பலத்த சேதங்களுக் குள்ளானது. மறுநாள் இடம் பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் இன்னொருவரின் வீடும் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 8 மணியளவில் ஓமந்தை சொந்தக்காரன் குளப் பகுதியில் இரண்டு வீச்சு விமானங்களும், ஒரு ஹெலிகொப்டரும் இணைந்து மேற்கெண்ட தாக்குதலில் இரத்தினம் என்பவரது வீடு சேதமாக்கப்பட்டது அத்துடன் இரு மாடுகள் கொல்லப்பட்டதுடன் பல மரங்களும் சேதமடைந்துள்ளன.

### நெருக்கடிகளுக்கு

றிய அவர் மேலும் பேசுகையில், நெருக்கடிகளுக்கும் மத்தியில் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் உறுதியோடு போராடுகிறார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் அனைவரு அணிதிரள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. மூர்த்தி அங்கு பேசுகையில் தமிழ்த் தொழிலாளர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து சிங்கள தேசத்தின் தலைமைத்துவத்தை தூக்கியெறிந்து தமிழீழ தேசத்தை நிறுவும் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் அவர்களும் பங்கு கொண்டு உரையாற்றினார் இக் கூட்டத்தில் கூட்டுறவாளர்கள் உட்படப் பல ஸ்தாபனங்களின் முக்கிய பிரதிநிதிகள் சுமார் எண்நூறு பேர்வரையில் கலந்து கொண்டனர்.

# விசைப்படகு மீது கலிபர் தாக்கு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த சிறிலங்கா கடற்படையின் விசைப்படகு மீது விடுதலைப் புலிகள் 50 கலிபர் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் இவ்விசைப் படகு திரும்பி ஓடிவிட்டது. இச்சம்பவம் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் இடம் பெற்றது.

இதேவேளை நேற்றுக்காலை ஒன்பது பத்து மணியளவில்வல்வெட்டித்துறையை நோக்கி ஐந்து ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டுள்ளன. இதனால் இரு வீடுகளும், கடையும் சேதமடைந்துள்ளன.

# தற்கொலை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்குப்போட்டு தற்கொலை செய்துள்ளார்.

சி. யோகநாதன் (வயது 32) என்ற குடும்பஸ்தரே நேற்று துணி ஒன்றினால் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டார். உடனடியாக யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்து வந்த போதிலும் அவர் மரணமடைந்துள்ளார். (க)

### கடன்

ணிகளால் பயிர்ச் செய்கையில் ஈடுபடவில்லை என்றும் இதனால் கடன் கோரி விண்ணப்பிக்கவில்லை என்றும் தெரிவித்தார். (க)

### மூன்று தமிழர்

அவர்கள் இலங்கையில் இருந்து செய்த மேன் முறையீட்டைத் தொடர்ந்து குடியேற்ற அலுவலகத்தில் மீண்டும் லண்டனுக்கு அழைக்கப்பட்டனர். பிரிட்டன் உள்துறையின் தவறைச் சுட்டிக்காட்டிய குடியேற்ற அலுவலகம் இம்மூவரையும் அழைத்திருந்தது. தற்பொழுது இம்மூவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் பிரிட்டனின் சட்டத்துறை சிக்கல்களை மனித உரிமைக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தில் விளக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. குர்திஷ் போன்ற அகதிகளின் வருகையை கட்டுப்படுத்த பிரிட்டன் கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் இத்தருணத்தில் இவ்வழக்கு பிரிட்டன் அரசுக்கு தலையிடியை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

### அரசாங்கம் பேச்சு

துரிதப்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் 92 அதிகப்படி வாக்குகளைப்பெற்று நிறைவேறியது. 113உறுப்பினர்கள் ஆதரித்தும், 21 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்து வாக்களித்தது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.